Sl. No. :

**HTGS/19**

பதிவு எண் | | | | | | | | |

# 2019

# பொது அறிவு

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 2 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 200

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. **குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத் தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்த வித குறிப்புகளையும் செய்யக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
11. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் தான் முடிவானதாகும்.
12. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
13. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

[Turn over

1. Find the number of days between 12th January 2004 and 7th March 2004.

(A) 54 days

(B) 53 days

(C) 55 days

(D) 52 days

12 ஜனவரி 2004க்கும் 7 மார்ச் 2004க்கும் இடையில் உள்ள நாள்களைக் கணக்கிடுக.

(A) 54 நாள்

(B) 53 நாள்

(C) 55 நாள்

(D) 52 நாள்

2. If $x + y = 10$ and $xy = 5$ then the value of $\frac{x}{y} + \frac{y}{x}$ is

(A) 21 (B) 19

(C) 18 (D) 20

$x + y = 10$ மற்றும் $xy = 5$ எனில் $\frac{x}{y} + \frac{y}{x}$ -ன் மதிப்பு

(A) 21 (B) 19

(C) 18 (D) 20

3. Find the sum of the arithmetic series

$31 + 33 + \cdots + 53$

(A) 504 (B) 404

(C) 304 (D) 604

$31 + 33 + \cdots + 53$ என்ற கூட்டுத் தொடரின் கூடுதல் காண்க.

(A) 504 (B) 404

(C) 304 (D) 604

4. The mean of a group of 20 items was found to be 40. While checking it was found that an item 43 was wrongly written as 53 calculate the correct mean

(A) 39.5 (B) 43

(C) 53 (D) 10

ஒரு புள்ளி விவரத்தில் 20 மதிப்புகளின் கூட்டுச் சராசரி 40. அவைகளைச் சரிபார்க்கும் போது 43 என்ற மதிப்பு தவறுதலாக 53 என எழுதப்பட்டது தெரியவந்தது. அவ்விவரத்தின் சரியான கூட்டுச் சராசரியைக் கணக்கிடுக

(A) 39.5 (B) 43

(C) 53 (D) 10

5. If the "$n$"th term of the sequence $a_n = \frac{n+2}{2n+3}$, find $a_9$

(A) $\frac{10}{21}$ (B) $\frac{12}{11}$

(C) $\frac{13}{11}$ (D) $\frac{11}{21}$

ஒரு தொடர் வரிசையின் $n$ ஆம் உறுப்பு $a_n = \frac{n+2}{2n+3}$ எனில் $a_9$ காண்க

(A) $\frac{10}{21}$ (B) $\frac{12}{11}$

(C) $\frac{13}{11}$ (D) $\frac{11}{21}$

6. A frequency distribution is organizing of raw data in tabular form, which can be represented graphically by

(A) Histogram (B) Horizontal axis

(C) Vertical axis (D) Inclusive form

வகைப்படுத்தப்படாத புள்ளி விவரங்களை, பகுத்து பட்டியலிடும் போது கிடைக்கும் நிகழ் வெண் பரவலை வரைபடம் மூலம் ———— என்றவாறு குறிப்பிடலாம்.

(A) நிகழ்வெண் செவ்வகம் (B) அகலமான பிரிவு

(C) நீளமான பிரிவு (D) உள்ளடக்கம் பிரிவு

7. A cone is 8.4 cm high and the radius of its base is 2.1 cm. It is melted and recast into a sphere. Find the radius of the sphere

(A) 2.4 cm
(B) 2.1 cm
(C) 2.2 cm
(D) 2.3 cm

ஒரு கூம்பின் அடிப்பக்கத்தின் ஆரம் 2.1 செ.மீ. உயரம் 8.4 செ.மீ. அது உருக்கப்பட்டு ஒரு கோளமாக வார்க்கப்பட்டால் கோளத்தின் ஆரம் என்ன?

(A) 2.4 செ மீ
(B) 2.1 செ மீ
(C) 2.2 செ மீ
(D) 2.3 செ மீ

8. If 4 men or 6 boys can finish a piece of work in 20 days, in how many days can 6 men and 11 boys finish it?

(A) 5 days
(B) 6 days
(C) 7 days
(D) 8 days

4 ஆண்கள் அல்லது 6 பையன்கள் ஒரு வேலையை 20 நாட்களில் முடிப்பார்கள். அவ்வேளையை 6 ஆண்கள் மற்றும் 11 பையன்கள் எத்தனை நாட்களில் முடிப்பார்கள்?

(A) 5 நாட்கள்
(B) 6 நாட்கள்
(C) 7 நாட்கள்
(D) 8 நாட்கள்

9. Evaluate : $(256)^{0.16} \times (16)^{0.18} = ?$

(A) 4
(B) 16
(C) 64
(D) 256.25

மதிப்பு காண்க : $(256)^{0.16} \times (16)^{0.18} = ?$

(A) 4
(B) 16
(C) 64
(D) 256.25

10. Find the difference between simple interest and compound interest for a sum of Rs. 9,000 lent at 10% p.a. is 2 years

(A) Rs. 90

(B) Rs. 80

(C) Rs. 100

(D) Rs. 110

ரூ. 9,000 க்கு 10% வட்டி வீதம் எனில் இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டிக்கும் தனி வட்டிக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்க

(A) ரூ. 90

(B) ரூ. 80

(C) ரூ. 100

(D) ரூ. 110

11. If $A:B=4:6$ and $B:C=18:5$ then $A:B:C$ is

(A) 4 : 6 :18

(B) 2 : 3 : 9

(C) 4 : 6 : 5

(D) 12 : 18 : 5

$A:B=4:6$ எனவும் $B:C=18:5$ எனவும் இருப்பின் $A:B:C$ = ?

(A) 4 : 6 :18

(B) 2 : 3 : 9

(C) 4 : 6 : 5

(D) 12 : 18 : 5

12. Two sound waves are $y = a\sin(wt - kx)$, $y = a\cos(wt - kx)$ the phase difference between the two waves is

(A) $\frac{\pi}{2}$

(B) $\frac{\pi}{4}$

(C) $\pi$

(D) Zero

$y = a\sin(wt - kx)$, $y = a\cos(wt - kx)$ என்பது இரண்டு ஒலி அலைகளின் சமன்பாடு ஆகும். அவற்றிற்கு இடையே உள்ள கட்ட வேறுபாடு என்ன?

(A) $\frac{\pi}{2}$

(B) $\frac{\pi}{4}$

(C) $\pi$

(D) Zero (சுழி)

13. In SI system of units, the unit of solid angle

(A) Radian

(B) Steradian

(C) Degree

(D) Celcius

SI அலகு முறையில், திண்மக் கோணத்தின் அலகு

(A) ரேடியன்

(B) ஸ்டிரேடியன்

(C) டிகிரி

(D) செல்சியஸ்

14. Which of the following is most abundant in earth's crust?

(A) C. Carbon

(B) Si. Silicon

(C) Ge. Germonium

(D) Sn. Tin

பின்வருவனவற்றுள் எது புவியில் அதிகமாக கிடைக்கிறது?

(A) C. கார்பன்

(B) Si. சிலிகன்

(C) Ge. ஜெர்மானியம்

(D) Sn. டின்

15. Select the correct statement with respect to d-block elements

(A) They are all metals

(B) They show variable valency

(C) They form coloured ions and complex salts

(D) All above statement are correct

d-தொகுதி தனிமங்களைப் பொறுத்த சரியான கூற்றுரையைத் தேர்ந்தெடு

(A) அவை அனைத்தும் உலோகங்கள்

(B) அவை வேறுபட்ட இணைதிறன்களைக் கொண்டுள்ளன

(C) அவை நிறமுள்ள அயனிகளையும், அணைவுச் சேர்மங்களையும் உருவாக்குகின்றன

(D) மேற்கூறிய அனைத்தும் சரியானவை

16. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Nokrek | 1. | Uttar Pradesh |
| (b) | Namdapha | 2. | West Bengal |
| (c) | Nanda Devi | 3. | Arunachal Pradesh |
| (d) | Sundarbans | 4. | Megalaya |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | நாக்ரக் | 1. | உத்தர பிரதேசம் |
| (b) | நம்தபா | 2. | மேற்கு வங்கம் |
| (c) | நந்தாதேவி | 3. | அருணாசல பிரதேசம் |
| (d) | சுந்தரவனம் | 4. | மேகாலயா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

17. The method of permanent birth control in male is

(A) Tubectomy

(B) Vasectomy

(C) Thyrotectomy

(D) Hyserectomy

ஆண்களுக்கான ஓர் நிலையான கருத்தடை முறையாகும்

(A) டியூபெக்டமி

(B) வாசெக்டமி

(C) தைரோக்டமி

(D) ஹைசர்க்டமி

18. Which act curbed the freedom of the press at the time of British rule?
(A) The Vernacular Press Act of 1878 (B) The Charter Act of 1833
(C) The Arms Act of 1878 (D) Rowlatt Act of 1919

ஆங்கிலேய ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட பத்திரிக்கைத் தடைச் சட்டம் எது?
(A) தாய்மொழி பத்திரிகைச் சட்டம் 1878 (B) 1833 பட்டயச் சட்டம்
(C) 1878 படைக்கலச் சட்டம் (D) 1919 ரௌலட் சட்டம்

19. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | East India Company's rule came to an end | 1. | 1919 |
| (b) | Communal representation introduced | 2. | 1935 |
| (c) | Dyarchy was introduced in provinces | 3. | 1858 |
| (d) | Introduction of Dyarchy at the centre | 4. | 1909 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

கீழ்கண்டவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வருதல் | 1. | 1919 |
| (b) | வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அறிமுகம் | 2. | 1935 |
| (c) | மாகாணங்களில் இரட்டையாட்சி அறிமுகம் | 3. | 1858 |
| (d) | மத்தியில் இரட்டையாட்சி அறிமுகம் | 4. | 1909 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

20. Identify the incorrect pair :
I. Brahmo Samaj – Raja Ram Mohan Roy – 1828
II. Young Bengal Movement – Henry Vivian Derozio – 1909
III. Arya Samaj – Swami Dayanand Saraswathi – 1875
IV. Prarthana Samaj – Atmaram Pandurang – 1888
(A) I only (B) II and IV only
(C) III and IV only (D) I and IV only

தவறான இணையை அடையாளம் காண் :
I. பிரம்ம சமாஜம் – ராஜா ராம் மோகன் ராய் – 1828
II. இளம் வங்காள இயக்கம் – ஹென்றி விவியன் டெரோசியோ – 1909
III. ஆரிய சமாஜம் – சுவாமி தயானந்த சரஸ்வதி – 1875
IV. பிரார்த்தனை சமாஜம் – ஆத்மராம் பாண்டுரங் – 1888
(A) I மட்டும் (B) II மற்றும் IV மட்டும்
(C) III மற்றும் IV மட்டும் (D) I மற்றும் IV மட்டும்

21. According to Mercantilists ———— and ———— were ranked second in importance.

(A) Agriculture and industry

(B) Trade and industry

(C) Industry and manufacture

(D) Industry and export

வணிகவாதத்தின் கூற்றுப்படி ———— மற்றும் ———— துறைகள் இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

(A) வேளாண்மை மற்றும் தொழில்

(B) வாணிபம் மற்றும் தொழில்

(C) தொழில் மற்றும் உற்பத்தி

(D) தொழில் மற்றும் ஏற்றுமதி

22. To check inflation Central Bank ———— the cash reserve ratio.

(A) Increase

(B) Decrease

(C) Maintain the same level

(D) Does not make any change

பணவீக்கத்தை கட்டுப்படுத்த, மையவங்கி ரொக்க இருப்பு வீதத்தை

(A) அதிகரிக்கும்

(B) குறைக்கும்

(C) ஒரே அளவாக வைத்திருக்கும்

(D) எந்த வித மாற்றமும் செய்வதில்லை

23. Match the following :

(a) Quantitative credit control measure — 1. Direct
(b) Qualitative credit control measure — 2. Bank rate increased
(c) To control inflation — 3. Bank rate decreased
(d) To control deflation — 4. Indirect

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

சரியாக பொருத்துக :

(a) கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறை — 1. நேரடி முறை
(b) கடன் தன்மை கட்டுப்பாட்டு முறை — 2. வங்கி வீதம் அதிகரிக்கப்படும்
(c) பணவீக்கத்தை கட்டுப்படுத்த — 3. வங்கி வீதம் குறைக்கப்படும்
(d) பணவாட்டத்தை கட்டுப்படுத்த — 4. மறைமுக முறை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

24. Match the following :

(a) Basic goods — 1. Cars
(b) Capital goods — 2. Plywood
(c) Consumer goods — 3. Machineries
(d) Intermediate goods — 4. Cement

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

சரியானதை பொருத்துக :

(a) அடிப்படைப் பண்டங்கள் — 1. மகிழ்வுந்து
(b) மூலதனப் பண்டங்கள் — 2. பிளைவுட்
(c) நுகர்வுப் பண்டங்கள் — 3. இயந்திரங்கள்
(d) இடைநிலை பண்டங்கள் — 4. சிமெண்ட்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

25. By whom defined "Every branch of knowledge has its fundamental discovery in mechanics, it is the wheel, in science fire, in politics the vote similarly in Economics in the whole commercial side of mans social existence money is essential invention on which all the rest is based.

(A) Seligman (B) Daldon (C) Fisher (D) Crowther

அனைத்துப் பாடப் பிரிவிலும் ஒரு கண்டுபிடிப்பு உண்டு. எந்திரவியலில் சக்கரமும், அறிவியலில் தீயும் அரசியலில் வாக்கு சீட்டும் இருப்பது போல பொருளியலில் மனித சமுதாய வாழ்க்கையில் வாணிகத்தில் பணம் ஒரு முக்கிய கண்டுபிடிப்பாகும் மற்றவைகள் அனைத்தும் அதைச் சார்ந்தே உள்ளது எனக் கூறியவர்

(A) செலிக்மேன் (B) டால்டன் (C) பிஷர் (D) கிரௌத்தர்

26. Taiga forest :

Consider the following statements, choose the correct answer using code given below :

(i) These are the largest biome located between 50° and 60° North latitudes.

(ii) More than 1700 species of trees are found in these forest

(iii) Trees shed their leaves during summer

(A) (i) only correct

(B) (i) and (ii) are correct

(C) (i) and (iii) are correct

(D) (i), (ii) and (iii) are correct

ஊசியிலைக் காடுகள் (Taiga forest)

கீழ்காணும் வாக்கியங்களை அடிப்படையாக கொண்டு சரியான விடையை கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து தேர்வு செய்க.

(i) 50° முதல் 60° வட அட்சக் கோடுகளுக்கு இடையில் அமைந்துள்ள இந்தக் காடுகளே மிகப் பெரிய உயிரினம் சூழ்வாழிடங்கள் ஆகும்

(ii) இக்காடுகளில் ஏறக்குறைய 1700 வகையான மரவகைகள் காணப்படுகின்றன

(iii) இம்மரங்கள் கோடைகாலத்தில் இலைகளை உதிர்த்துவிடுகின்றன

(A) (i) மட்டும் சரி

(B) (i) மற்றும் (ii) ம் சரி

(C) (i) மற்றும் (iii) ம் சரி

(D) (i), (ii) மற்றும் (iii) ம் சரி

27. Which of the following statement is/are correct?

(i) Tobacco is said to have been brought to India by the Portuguese

(ii) India is the third largest producer of tobacco

(iii) The major tobacco producing states are Tamil Nadu, Andhra Pradesh and Karnataka

(A) (i) only correct

(B) (i) and (iii) only correct

(C) (i) and (ii) only correct

(D) (i), (ii) and (iii) correct

பின்வரும் கூற்றுகளில் சரியானவை எது/எவை?

(i) புகையிலை போர்ச்சுக்கீசியரால் முதன் முதலாக இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டது

(ii) புகையிலை உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்தை பெறுகிறது

(iii) இந்தியாவில் புகையிலை உற்பத்தி செய்யும் மாநிலங்கள் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் மற்றும கர்நாடகம்

(A) (i) மட்டும் சரி

(B) (i) மற்றும் (iii) ம் சரி

(C) (i) மற்றும் (ii) ம் சரி

(D) (i), (ii) மற்றும் (iii) ம் சரி

28. The heavy air traffic in the world is that between the city of

(A) Japan and Tokyo

(B) LosAngeles and Newyork

(C) Singapore and Malaysia

(D) London and Newyork

உலகின் செறிந்த விமான போக்குவரத்து இவ்விரு நகரங்களுக்கிடையே நடைபெறுகின்றது.

(A) ஜப்பான் – டோக்கியோ

(B) லாஸ்ஏஞ்சல்ஸ் – நியூயார்க்

(C) சிங்கப்பூர் – மலேசியா

(D) இலண்டன் – நியூயார்க்

29. Nuclear Test Ban treaty was signed in

(A) 1965 (B) 1993

(C) 1963 (D) 1998

அணு ஆயுத தடை ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு

(A) 1965 (B) 1993

(C) 1963 (D) 1998

30. How many unites are there?

(A) 3 (B) 4 (C) 5 (D) 6

நீதிப்பேராணைகளின் எண்ணிக்கை எத்தனை?

(A) 3 (B) 4 (C) 5 (D) 6

31. In which one of the following electors participate in government indirectly?

(A) Direct democracy

(B) Monarchy

(C) Oligarchy

(D) Representative democracy

எத்தகைய முறையில் அரசாங்கத்தில் வாக்காளர்கள் மறைமுகமாக பங்கேற்கிறார்கள்?

(A) நேரிடை மக்களாட்சி

(B) முடியாட்சி

(C) சிறு குழுவாட்சி

(D) பிரதி நிதித்துவ மக்களாட்சி

32. In which year Right to property has been abolished?

(A) 1978 (B) 1478

(C) 1947 (D) 1950

சொத்துரிமை நீக்கப்பட்ட ஆண்டு எது?

(A) 1978 (B) 1478

(C) 1947 (D) 1950

33. Where is the International court of the Justice located?

(A) China

(B) America

(C) Netherland

(D) Finland

உலக நீதி மன்றம் எந்த நாட்டில் உள்ளது?

(A) சீனா

(B) அமெரிக்கா

(C) நெதர்லாந்து

(D) பின்லாந்து

34. The headquarter of the United Nations is in

(A) Janeva

(B) France

(C) Kenya

(D) New York

ஐக்கிய நாடுகள் கழக தலைமையகம் எங்குள்ளது?

(A) ஜெனிவா

(B) பிரான்ஸ்

(C) கென்யா

(D) நியூயார்க்

35. Which emblem was adopted by the Vijayanagara rulers?

(A) Tiger

(B) Fish

(C) Boar (Varahaas)

(D) Bow

விஜயநகர அரசின் அரசு முத்திரை எது?

(A) புலி

(B) மீன்

(C) பன்றி (வராகம்)

(D) வில்

36. Who introduced many new ragas such as ghora and sanam?

(A) Amir Khusrau

(B) Pir Bhodan

(C) Raja Man Singh

(D) Firoz Tughlaq

கோரா சானம் போன்ற புதிய ராகங்களை அறிமுகம் செய்தவர் யார்?

(A) அமீர் குஸ்ரு

(B) பீர் போதன்

(C) ராஜா மன் சிங்

(D) பிரோஸ் துக்ளக்

37. Who was the patron of the great Buddhist Scholar Vasubondu?

(A) Sri Gupta

(B) Ghatotkacha

(C) Chandra Gupta-I

(D) Samudra Gupta

புகழ் மிக்க புத்த சமய அறிஞரான வசுபந்து என்பவரை ஆதரித்த குப்த மன்னர் யார்?

(A) ஸ்ரீ குப்தர்

(B) கடோத்கஜர்

(C) முதலாம் சந்திர குப்தா

(D) சமுத்திர குப்தர்

38. Tansen lived in the court of

(A) Babar

(B) Akbar

(C) Sher Shah

(D) Jahangir

தான்சேன் யாருடைய அவையில் இருந்தார்?

(A) பாபர்

(B) அக்பர்

(C) ஷெர்ஷா

(D) ஜஹாங்கீர்

39. When was the 550th Birth Anniv of Gurunanak celebrate?

(A) 2019 (B) 1919

(C) 2017 (D) 2018

குருநானக்கின் 550வது பிறந்த ஆண்டு எப்போது கொண்டாடப்பட்டது?

(A) 2019 (B) 1919

(C) 2017 (D) 2018

40. Where these words were taken from Sathyam, Sivam, Sundram.

(A) Sanskrit

(B) Hindi

(C) Urudu

(D) English

சத்யம், சிவம், சுந்தரம் என்ற வார்த்தைகள் எந்த மொழியிலிருந்து எடுக்கப்பட்டவை?

(A) சமஸ்கிருதம்

(B) ஹிந்தி

(C) உருது

(D) ஆங்கிலம்

41. In 2001, a stamp was issued on the historical ruler in India

(A) Chandragupta Maurya

(B) Ashoka

(C) Bimbisara

(D) Ajatasatru

2001 ஆம் ஆண்டு இந்திய வரலாற்றில் தலைசிறந்த ஆட்சியாளருக்கு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது ______________.

(A) சந்திரகுப்த மௌரியர்

(B) அசோகர்

(C) பிம்பிசாரர்

(D) அஜாதசத்ரு

42. Dual party system in ———

(A) India
(B) America
(C) France
(D) British and America

இரு கட்சிமுறை உள்ள நாடு ———

(A) இந்தியா
(B) அமெரிக்கா
(C) பிரான்சு
(D) பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கா

43. Vidhyanjali scheme was an initiative of

(A) Ministry of Youth Affairs and Sports
(B) Ministry of Science and Technology
(C) Ministry of Labour and Employment
(D) Ministry of Human Resource Development

வித்யாஞ்சலி திட்டம் - இத்துறையால் துவக்கப்பட்டது

(A) விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சகம்
(B) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்
(C) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்
(D) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

44. Misoram State in ———

(A) North East
(B) South East
(C) North West
(D) South West

மிசோரம் மாநிலம் ——— மாகாணம் ஆகும்

(A) வட கிழக்கு
(B) தென் கிழக்கு
(C) வட மேற்கு
(D) தென் மேற்கு

45. Physical features like Mountains, Plateaus, Rivers and Oceans are drawn on a ———

(A) Political map
(B) Thematic map
(C) Physical map
(D) All these

மலைகள், பீடபூமிகள்,ஆறுகள், கடல்கள் போன்ற இயற்கைக் கூறுகளை வரைந்துகாட்டுவது

(A) அரசியல் வரைபடங்கள்
(B) கருத்து சார் வரைபடங்கள்
(C) இயற்கை அமைப்பு வரைபடங்கள்
(D) இவையனைத்தும்

46. The Second Edition of the Tamilnadu Global investors meet (GIM) held on

(A) 23rd and 24th January 2018

(B) 23rd and 24th January 2017

(C) 23rd and 24th January 2015

(D) 23rd and 24th January 2019

2 வது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்ற நாட்கள்

(A) 23 மற்றும் 24 ஜனவரி 2018

(B) 23 மற்றும் 24 ஜனவரி 2017

(C) 23 மற்றும் 24 ஜனவரி 2015

(D) 23 மற்றும் 24 ஜனவரி 2019

47. Who is the finance minister of the India in year 2018

(A) ARUN JAITLEY

(B) SUSHMA SWARAJ

(C) NARENDRA MODI

(D) VENKAIAH

2018-ல் இந்தியாவின் நிதிஅமைச்சராக இருந்தவர்

(A) அருண்ஜெட்லி

(B) சுஷ்மா சுவராஜ்

(C) நரேந்திரமோடி

(D) வெங்கையா

48. India's first Microprocessor was designed by Whom ———————

(A) IITM – Indian Institute of Technology madras

(B) IITD – Indian Institute of Technology Delhi

(C) IITK – Indian Institute of Technology Korakpur

(D) IITC – Indian Institute of Technology Calcutta

இந்தியாவின் முதல் மைக்ரோ புரோஷசரை கண்டுபிடித்தவர்கள்

(A) IITM (B) IITD

(C) IITK (D) IITC

49. Evaluate $123 \times 999 + 123$

(A) 246999

(B) 123000

(C) 246000

(D) 123999

மதிப்பிடுக. $123 \times 999 + 123$

(A) 246999

(B) 123000

(C) 246000

(D) 123999

50. The surface area of the two different spheres are in the ratio of 9 : 25 then their volumes are in ratio

(A) 8 : 625

(B) 729 : 15625

(C) 27 : 75

(D) 27 : 125

இரண்டு வேறுபட்ட கோளங்களின் வளைபரப்புகளின் விகிதம் 9 : 25 அவற்றின் கன அளவுகளின் விகிதம்

(A) 8 : 625

(B) 729 : 15625

(C) 27 : 75

(D) 27 : 125

51. The ratio of boys to girls in a class is 5 : 6. If the number of boys is 30, find the number of girls

(A) 36 (B) 46

(C) 32 (D) 42

ஒரு வகுப்பில் உள்ள மாணவ மாணவிகளின் விகிதம் 5 : 6 மாணவர்களின் எண்ணிக்கை 30 எனில் மாணவிகளின் எண்ணிக்கை என்ன?

(A) 36 (B) 46

(C) 32 (D) 42

52. A book contains 300 pages. Each page has 32 lines with the same content, how many pages will the book contain if every page has 24 lines?

(A) 350 (B) 400

(C) 425 (D) 375

ஒவ்வொரு பக்கத்திலும் 32 வரிகளைக் கொண்ட புத்தகத்தின் மொத்தப் பக்கங்கள் 300. அதே செய்தி ஒவ்வொரு பக்கத்திலும் 24 வரிகளாக இருந்தால், புத்தகத்தின் மொத்தப் பக்கங்கள் எவ்வளவாக இருக்கும்?

(A) 350 (B) 400

(C) 425 (D) 375

53. If $y$ is inversly propotional to $x$ then we have $xy = K$ for $K > 0$. The graph is a

(A) Hyperbola (B) Circle

(C) Rectangular hyperbola (D) Ellipse

$y$ ஆனது $x$ அச்சுக்கு தலைகீழ் விகிதத்திலிருப்பின், ஏதேனும் ஒரு மிகை எண் $K > 0$ –க்கு $xy = K$ என நாம் பெறுகிறோம். இதன் வரைபடம் என்பது

(A) அதிபரவளையம் (B) வட்டம்

(C) செவ்வக அதிபரவளையம் (D) நீள்வட்டம்

54. Find the missing term ———— : 45 = 35 : 63.

(A) 53 (B) 25

(C) 35 (D) 55

விடுபட்ட எண் காண்க.

———— : 45 = 35 : 63.

(A) 53 (B) 25

(C) 35 (D) 55

55. The cost price of 16 notebooks is equal to the selling price of 12 notebooks. Find the gain percent

(A) 24% (B) $33\frac{1}{3}$%

(C) 16% (D) 12%

16 நோட்டுப் புத்தகங்களின் அடக்கவிலை 12 நோட்டு புத்தகங்களின் விற்பனை விலைக்குச் சமம். இதன் இலாப சதவீதம் காண்க

(A) 24% (B) $33\frac{1}{3}$%

(C) 16% (D) 12%

56. The sum of four consecutive even positive integers is 1284. Find the smallest number

(A) 320 (B) 318

(C) 324 (D) 326

நான்கு அடுத்தடுத்த இரட்டைப்படை மிகை முழுக்களின் கூடுதல் 1284 எனில் அவற்றின் மிகச் சிறிய எண் காண்க

(A) 320 (B) 318

(C) 324 (D) 326

57. Find the sum of the arithmetic series

$5+11+17+\ldots+95$

(A) 700 (B) 600

(C) 800 (D) 900

$5+11+17+\ldots+95$ என்ற கூட்டுத் தொடரின் கூடுதல் காண்க.

(A) 700 (B) 600

(C) 800 (D) 900

58. $\frac{1}{(1+\sqrt{2})}+\frac{1}{(\sqrt{2}+\sqrt{3})}+\frac{1}{(\sqrt{3}+\sqrt{4})}+\cdots+\frac{1}{\sqrt{99}+\sqrt{100}}=?$

(A) 1 (B) 5

(C) 9 (D) 10

$\frac{1}{(1+\sqrt{2})}+\frac{1}{(\sqrt{2}+\sqrt{3})}+\frac{1}{(\sqrt{3}+\sqrt{4})}+\cdots+\frac{1}{\sqrt{99}+\sqrt{100}}=?$

(A) 1 (B) 5

(C) 9 (D) 10

59. If the product of two number is 5 and one of the number is $\frac{3}{2}$, then the sum of the two numbers is

(A) $4\frac{1}{3}$ (B) $4\frac{2}{3}$

(C) $4\frac{5}{6}$ (D) $5\frac{1}{6}$

இரு எண்களின் பெருக்குத் தொகை 5, அவற்றில் ஒரு எண் $\frac{3}{2}$ எனில் இரு எண்களின் கூடுதலானது

(A) $4\frac{1}{3}$ (B) $4\frac{2}{3}$

(C) $4\frac{5}{6}$ (D) $5\frac{1}{6}$

60. What is 95% of 4598?

(A) 4800 (B) 4840

(C) 4850 (D) 4880

4598-ன் 95% யாது?

(A) 4800 (B) 4840

(C) 4850 (D) 4880

61. Find the sum of $7+14+21+...+490$

(A) 16395 (B) 17395

(C) 18395 (D) 19395

$7+14+21+...+490$ என்ற தொடரின் கூடுதல்

(A) 16395 (B) 17395

(C) 18395 (D) 19395

62. If the volume of a sphere is $\frac{9}{16}\pi$ then its radius is

(A) $\frac{4}{3}$ cm (B) $\frac{3}{4}$ cm

(C) $\frac{3}{2}$ cm (D) $\frac{2}{3}$ cm

$\frac{9}{16}\pi$ க.செமீ கன அளவு கொண்ட கோளத்தின் ஆரம் என்பது

(A) $\frac{4}{3}$ செமீ (B) $\frac{3}{4}$ செமீ

(C) $\frac{3}{2}$ செமீ (D) $\frac{2}{3}$ செமீ

63. Thermistor is a

(A) Material with positive Thomson effect

(B) Material with a negative temperature co-efficient

(C) Material with a positive temperature co-efficient

(D) Material with negative Thomson effect

தெர்மிஸ்டார் என்பது

(A) நேர் தாம்சன் விளைவு கொண்டது

(B) எதிர்க்குறி மின்தடை வெப்பநிலை எண் கொண்டது

(C) நேர்க்குறி மின்தடை வெப்பநிலை எண் கொண்டது

(D) எதிர் தாம்சன் விளைவு கொண்டது

64. The phenomenon of transfer of heat without any material medium is known as

(A) Radiation

(B) Convection

(C) Conduction

(D) None of these

பருப்பொருள் ஊடகம் துணையின்றி வெப்பம் மாற்றப்படும் நிகழ்வு

(A) கதிர்வீச்சு

(B) வெப்பசலனம்

(C) வெப்பக் கடத்தல்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

65. Oxidation number of sulphur in sulphuric acid is

(A) +6

(B) –6

(C) +5

(D) –5

கந்தக அமிலத்தில் கந்தகத்தின் ஆக்ஸிஜனேற்ற எண்

(A) +6 (B) –6

(C) +5 (D) –5

66. In which of the following minerals, Aluminium is not present?

(A) Cryolite (B) Mica

(C) Feldspar (D) Fluorspar

பின்வரும் கனிமங்களில் அலுமினியம் இல்லாதது எது?

(A) கிரியோலைட் (B) மைகா

(C) பெல்ட்ஸ்பார் (D) புளோர்ஸ்பார்

67. In which year nutrition Export Committee of ICMR prescribed calorie requirement for IRM and IRW?

(A) 1967

(B) 1977

(C) 1968

(D) 1965

எந்த வருடம் இந்திய மருத்துவ ஆய்வுக் கவுன்சிலின் உணவு சிறப்புக் குழு ஓர் மாதிரி இந்திய ஆணுக்கும், பெண்ணிற்கும் தேவைப்படும் கலோரி அளவுகளைக் கணக்கிட்டுத் தந்துள்ளது

(A) 1967

(B) 1977

(C) 1968

(D) 1965

68. Statement : For a person fitted with artificial pacemaker after 7 years battery for the pacemaker was replaced by surgery

Reason : The pacemaker lithium battery lasts for 7 to 8 years.

(A) Statement correct and Reason is wrong

(B) Statement and reason are correct but the reason is not explaining the statement

(C) Statement and reason are correct and the reason explains the statement

(D) Statement and reason are wrong

கூற்று : செயற்கை பேஸ் மேக்கர் பொருத்தப்பட்ட ஒருவருக்கு 7 ஆண்டுகளுக்கு பிறகு அறுவை சிகிச்சை மூலம் பேஸ் மேக்கருக்கான பாட்டரியினை மருத்துவர் மாற்றி பொருத்துகின்றார்?

காரணம் : பேஸ் மேக்கரில் உள்ள லித்தியம் பாட்டரி 7 ஆண்டுகள் முதல் 8 ஆண்டுகள் வரை செயல்படக்கூடியது.

(A) கூற்று சரி காரணம் தவறு

(B) கூற்று சரி காரணம் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(C) கூற்று சரி காரணம் சரி காரணம் கூற்றை விளக்குகின்றது

(D) கூற்று தவறு காரணம் தவறு

69. An example for $C_4$ plant is

(A) Sugarcane
(B) Potato
(C) Wheat
(D) Rice

$C_4$ தாவரங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு

(A) கரும்பு
(B) உருளை
(C) கோதுமை
(D) நெல்

70. ———————— is composed of one or more cenospecies that are not able to intercross.

(A) Family
(B) Comparium
(C) Herbarium
(D) Ecospecies

———————— ஒன்று அல்லது பல கூட்டுச் சிற்றினங்களைக் கொண்ட, கலப்பினக் கலவி செய்யாத தாவரக் குழுவாகும்.

(A) குடும்பம்
(B) கம்பேரியம்
(C) ஹெர்பேரியம்
(D) சூழ்நிலைச் சிற்றினம்

71. An example of $C_3$ plant is

(A) Maize
(B) Sugarcane
(C) Tribulus
(D) Wheat

$C_3$ தாவரங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு

(A) மக்காச்சோளம்
(B) கரும்பு
(C) ட்ரிபுலஸ்
(D) கோதுமை

72. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Individual Satyagraha | 1. | 1942 |
| (b) | Quit India Resolution | 2. | 1940 |
| (c) | Cabinet Mission | 3. | 1947 |
| (d) | Mountbatten Plan | 4. | 1946 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | தனிநபர் சத்தியாகிரகம் | 1. | 1942 |
| (b) | வெள்ளையனே வெளியேறு தீர்மானம் | 2. | 1940 |
| (c) | காபினட் தூதுக்குழு | 3. | 1947 |
| (d) | மௌன்ட்பேட்டன் திட்டம் | 4. | 1946 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

73. Identify the incorrect pair.

(A) Secretary of State for India – 1858

(B) Legislative councils established in the provinces – 1892

(C) A bicameral legislature was setup at the centre – 1919

(D) Introduction of provincial Autonomy – 1935

பொருத்தமற்ற இணையை கண்டுபிடி.

(A) இந்திய அரசு செயலர் – 1858

(B) மாகாணங்களில் சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டது – 1892

(C) மத்தியில் ஈரவை சட்டமன்றம் அமைப்பு – 1919

(D) மாகாண தன்னாட்சி அறிமுகம் – 1935

74. The famous book "poverty and un British rule in India" was written by

(A) Jawaharlal Nehru (B) Mahatma Gandhi

(C) Dadabhai Naoroji (D) S.N. Banerjee

''இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்'' என்ற புகழ்பெற்ற நூலை எழுதியவர்

(A) ஜவஹர்லால் நேரு (B) மகாத்மா காந்தி

(C) தாதாபாய் நௌரோஜி (D) எஸ்.என். பானர்ஜி

75. Which is not correct statement?

Gender Related Development Index (GDI) adjusts the Human Development Index (HDI) to reflect measures of inequalities between men and woman.

(A) Female status in the society

(B) Female per capita income

(C) Female life expectancy

(D) Female adult literacy

தவறான கூற்றை கண்டுபிடிக்க

பாலின வளர்ச்சி குறியீட்டை (GDI) மனித மேம்பாட்டு குறியீட்டை (HDI) கொண்டு ஆண், பெண்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளின் அளவீடுகள்

(A) சமுதாயத்தில் பெண்களின் அந்தஸ்து

(B) பெண்ணின் தலா வருமானம்

(C) பெண்ணின் எதிர்பார்க்கப்பட்ட வாழ்வு காலம்

(D) பெண்ணின் வயது வந்த கல்விநிலை

76. Every state has a chief electoral officer. They are appointed by the

(A) President

(B) Chief Election Commissioner

(C) Chief Minister

(D) High Court Chief Judge

ஒவ்வொரு மாநிலங்களிலும் உள்ள தலைமைத் தேர்தல் அதிகாரியை நியமிப்பவர்

(A) குடியரசுத் தலைவர்

(B) தலைமைத் தேர்தல் ஆணையர்

(C) முதலமைச்சர்

(D) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

77. 'Planning requires a strong, competent and incorrupt administration' – Who says?

(A) Arthur Lewis

(B) Adam Smith

(C) J.S. Mill

(D) Lionel Robbins

“திட்டமிடுதலுக்கு ஒரு வலிமைமிக்க தகுதி வாய்ந்த மற்றும் ஊழலற்ற ஆட்சி செய்தல் அத்தியாவசியமானது” - யார் கூற்று?

(A) ஆர்தர் லூயிஸ்

(B) ஆடம் ஸ்மித்

(C) J.S. மில்

(D) இலயனல் ராபின்ஸ்

78. Which one of the following is a direct source of information about the interior of the earth?

(A) Earthquake waves

(B) Gravitational force

(C) Volcanoes

(D) Earth magnetism

பின்வருவனவற்றுள் புவியின் உள்ளமைப்பு பற்றிய தகவல்களை அறிய உதவும் நேரடி ஆதாரம் எது?

(A) நிலநடுக்க அலைகள்

(B) புவியீர்ப்பு விசைகள்

(C) எரிமலைகள்

(D) புவி காந்தபுலம்

79. In which country uses drip irrigation with high efficiency?

(A) Canada

(B) Mexico

(C) Egypt

(D) Israel

சொட்டு நீர்பாசனத்தை முழுத்திறனுடன் பயன்படுத்தும் நாடு எது?

(A) கனடா

(B) மெக்ஸிகோ

(C) எகிப்து

(D) இஸ்ரேல்

80. In which country have most important motor way M 25?

(A) Germany (B) Italy

(C) France (D) United Kingdom

எந்த நாட்டின் மிக முக்கியமான ஒரு மோட்டார் பாதையாக M 25 உள்ளது?

(A) ஜெர்மனி (B) இத்தாலி

(C) பிரான்ஸ் (D) ஐக்கிய அரசு

81. Which Article of the constitution guarantees seven freedoms for the citizens?

(A) Article 15 (B) Article 16

(C) Article 18 (D) Article 19

எந்த அரசியலமைப்பு விதி ஏழு அடிப்படை உரிமைகளை குடிமக்களுக்கு உறுதி செய்கிறது?

(A) விதி 15 (B) விதி 16

(C) விதி 18 (D) விதி 19

82. Under which Article, the Governor can promulgate ordinance when the state legislature is not in session?

(A) Article 356 (B) Article 213

(C) Article 153 (D) Article 163

எந்த அரசியல் சட்ட விதிப்படி ஆளுநர் சட்டமன்றம் கூடாத போது இடைக்கால சட்டங்களை இயற்றலாம்?

(A) விதி 356 (B) விதி 213

(C) விதி 153 (D) விதி 163

83. The Panchayat Raj was inaugurated in the year

(A) October $2^{nd}$ 1956 (B) October $2^{nd}$ 1959

(C) October $2^{nd}$ 1960 (D) December $2^{nd}$ 1978

பஞ்சாயத்து இராஜ்ஜியம் துவக்கி வைக்கப்பட்ட ஆண்டு?

(A) அக்டோபர் 2, 1956 (B) அக்டோபர் 2, 1959

(C) அக்டோபர் 2, 1960 (D) டிசம்பர் 2, 1978

84. Tenth Five Year Plan (2002-07) to priority for

(A) Reduction of poverty and population growth

(B) Basic industries

(C) Generation of employment

(D) Priority to agriculture

பத்தாவது ஐந்தாண்டு திட்டம் (2002–07) முன்னுரிமை வழங்கப்பட்டது

(A) வறுமை மற்றும் மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைத்தல்

(B) அடிப்படை தொழில்கள்

(C) வேலை வாய்ப்பை உருவாக்குதல்

(D) விவசாயம்

85. Who was the chairman of the drafting committee of the constituent assembly?

(A) Thiru. C. Rajagopalachari

(B) Dr. B.R. Ambedkar

(C) Thiru. Jawaharlal Nehru

(D) Dr. Rajendra Prasad

அரசியல் நிர்ணய சபையின் வரைவுக் குழு தலைவர்

(A) திரு. C. இராஜகோபாலாச்சாரியார்

(B) Dr. B.R. அம்பேத்கர்

(C) திரு. ஜவஹர்லால் நேரு

(D) Dr. இராஜேந்திர பிரசாத்

86. The spirit of laws published in the year

(A) 1948 (B) 1848

(C) 1748 (D) 1648

சட்டங்களின் உயிர் என்ற நூல் வெளியிடப்பட்ட ஆண்டு

(A) 1948 (B) 1848

(C) 1748 (D) 1648

87. What is the ministry of Diwani-i-Ariz is Sher Shah Sur period?

(A) In charge of Army

(B) In charge of revenue and Finance

(C) Foreign Minister

(D) Minister for communications

ஷெர்ஷா சூர் ஆட்சிக் காலத்தில் எந்த துறையின் அமைச்சர் "திவானி அரிஸ்" என அழைக்கப்பட்டார்?

(A) படைத்துறை

(B) வருவாய் மற்றும் நிதி நிர்வாகம்

(C) அயலுறவுத் துறை

(D) தகவல் தொடர்புத் துறை

88. Peshwa's rule started from

(A) A.D. 1713

(B) A.D. 1714

(C) A.D. 1715

(D) A.D. 1716

எந்த ஆண்டு முதல் பேஷ்வாக்களின் ஆட்சி தொடங்கியது?

(A) கி.பி. 1713

(B) கி.பி. 1714

(C) கி.பி. 1715

(D) கி.பி. 1716

89. When was the Bhamani Kingdom founded?

(A) 1325

(B) 1437

(C) 1347

(D) 1341

பாமினி அரசு எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது?

(A) 1325

(B) 1437

(C) 1347

(D) 1341

90. Shivaji was born in

(A) 1629

(B) 1626

(C) 1628

(D) 1627

சிவாஜி பிறந்த வருடம்

(A) 1629 (B) 1626

(C) 1628 (D) 1627

91. Oyilattam "the traditional folk from which state?

(A) Kerala

(B) Andra

(C) Tamilnadu

(D) Karnataka

"ஒயிலாட்டம்" என்ற பாரம்பரிய கலை எந்த மாநிலத்திலுடன் தொடர்புடையது?

(A) கேரளா

(B) ஆந்திரா

(C) தமிழ்நாடு

(D) கர்நாடகா

92. First amendment to the fundamental rights for social reservation policies to the state was brought by

(A) V.V. Subramaniya Iyear

(B) Pandit Jawaharlal Nehru

(C) Mahatma Gandhi

(D) Dr. Muthulakshmi

சமூக இட ஒதிக்கீட்டுக் கொள்கை தொடர்பாக அடிப்படை உரிமையில் முதல் சட்டத்திருத்தத்தை கொண்டு வந்தவர்

(A) வி.வி. சுப்பிரமணிய ஐயர்

(B) பண்டித ஜவஹர்லால் நேரு

(C) மகாத்மாகாந்தி

(D) டாக்டர் முத்துலட்சுமி

93. Who is the External affairs minister of India in 2019?

(A) Sushma swaraj

(B) Venkaiya

(C) Arun Jately

(D) Narendra Modi

2019 –ல் இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர்

(A) சுஷ்மா சுவராஜ்

(B) வெங்கையா

(C) அருண்ஜெட்லி

(D) நரேந்திர மோடி

94. BSLVC 44 lifted off with microsat –R and Kalam sat on

(A) 24th January 2018

(B) 24th January 2019

(C) 24th January 2017

(D) 24th January 2016

பி.எஸ்.எல்.வி-சி 44, மைக்ரோசாட்-R மற்றும் கலாம் சாட் விண்ணில் ஏவப்பட்ட நாள்

(A) 24 ஜனவரி 2018

(B) 24 ஜனவரி 2019

(C) 24 ஜனவரி 2017

(D) 24 ஜனவரி 2016

95. Fuel that is used in Jet air craft and stove

(A) Petrol

(B) Petroleum gas

(C) Kerosene

(D) Diesel

ஸ்டவ் மற்றும் ஜெட் ஏர் விமானத்தில் பயன்படுத்தும் எரிபொருள்

(A) பெட்ரோல்

(B) பெட்ரோலிய எரிவாயு

(C) மண்ணெண்ணெய்

(D) டீசல்

96. Robert Gallo discovered HIV which causes Aids in Year

(A) 1994 (B) 1984

(C) 1988 (D) 1985

இராபர்ட் கேலோ எய்ட்ஸை உருவாக்கும் HIV வைரஸைக் கண்டுபிடித்த ஆண்டு

(A) 1994 (B) 1984

(C) 1988 (D) 1985

97. The equator divides the continent into two equal halves

(A) North America (B) Europe

(C) Africa (D) Asia

நில நடுக்கோடு இந்தக் கண்டத்தை இரண்டாகப் பிரிக்கிறது.

(A) வட அமெரிக்கா (B) ஐரோப்பா

(C) ஆப்ரிக்கா (D) ஆசியா

98. Cyclone Gaja – the word "Gaja" named from in which country?

(A) CHINA (B) SRILANGA

(C) SUMTHRA (D) JAPAN

கஜாபுயலில் உள்ள கஜா என்ற வார்த்தை எந்த நாட்டிலிருந்து பெறப்பட்டது ?

(A) சீனா (B) ஸ்ரீலங்கா

(C) சுமத்ரா (D) ஜப்பான்

99. The decision to start IMF was taken at ——————

(A) Geneva conference (B) Bretton woods conference

(C) World trade organisation (D) Foreign direct investment

பன்னாட்டு நிதி நிறுவனம் தோற்றுவிப்பதற்கான தீர்மானம் எங்கு நிறைவேற்றப்பட்டது

(A) ஜெனிவா மாநாடு (B) பிரிட்டன் உட்ஸ் மாநாடு

(C) உலக வர்த்தக அமைப்பு (D) அயல்நாட்டு நேரடி முதலீடு

100. The first Human Development Report was published in 1990 by UNDP under the guidance of —————— an eminent Economist.

(A) Weiner (B) Muhahub – Ul – Haq

(C) Horace secrist (D) Thilak

முதல் மனிதவள மேம்பாட்டு அறிக்கையானது 1990 ம் ஆண்டு UNDP நிறுவனத்தால் —————— என்ற பொருளியலறிஞரின் வழிகாட்டுதலின்படி வெளியிடப்பட்டது

(A) வெயினர் (B) முகஹப்-உல்-ஹக்

(C) ஹொரேஸ் செக்ரிஸ்ட் (D) திலக்